تاميلي
தமிழ்

MahadSunnah

معهد السنة
As-Sunnah College

# خصال الفطرة

# இஸ்லாம் கூறும் இயற்கை பண்புகள்


ஆசிரியர்:

கலாநிதி அஷ்ஷெய்க் ஹைதம் முஹம்மத் சர்ஹான்

முன்னால் மதீனா புனித பள்ளி கலாசாலை ஆசிரியர் ,

மஃஹத் சுன்னாஹ் இணையதள மேற்பார்வையாளர்.



www.alsarhaan.com

WWW.MAHADSUNNAH.COM

# இயற்கை பண்புகள்

**சில இயற்கை பண்புகள் உள்ளன அவற்றை அல்லாஹ் இயல்பாக மனிதகுலத்துக்கு வழங்கியுள்ளான், அவற்றைக் கடைபிடித்தால் அல்லாஹ்வும் அவர்களை விரும்புவான் அவர்களும் அழகிய வடிவிலும், பரிபூரன தோற்றத்திலும் காணப்படுவர்.**

**நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள்:**
**ஐந்து விடயங்கள் "ஃபித்ரா" இயற்கை பண்புகளாகும். அவையாவன:**

**விருத்தசேதனம், மறைவிடங்களிலுள்ள முடிகளை நீக்குதல், நகம் வெட்டுதல், அக்குள் முடியை அகற்றுதல், மீசையை கத்தரித்தல்.**
(புகாரி:6297)

01. **மறைவிடங்களில் உள்ள முடிகளை அகற்றுதல்.**

அதற்கு "அல் இஸ்திஹ்தாத்" என்றழைக்கப்படும். அவ்வாறு சொல்லப்படுவதற்கு காரணம் முடியை மழிக்கும் கூரான சாதனங்களைப் பயன்படுத்துவதாலாகும். இது அல்லாத வேறு நவீன அகற்றும் சாதனங்களையும் பயன்படுத்த முடியும்.

## 02. விருத்தசேதனம் (கத்னா)

இது ஆண்களுக்கு கடமையாக்கப்பட்டுள்ளது, குழந்தை பிறந்தால் ஏழாம் நாள் அதை நிறைவேற்றுவது விரும்பத்தக்கது. காரணம் இலகுவாக குணமடைவதற்கும் குழந்தை சிறு வயதிலிருந்து இஸ்லாம் கூறும் பூரண வடிவில் வளர்வதற்கும் சாதகமாக அமைகிறது.

## 02. மீசையை நன்றாக கத்தரித்தல்.

ஏனெனில் அது ஆணுக்கு அழகாகும், தீயோர்கள் அவ்வாறு செய்வதில்லை.

## 03. நகங்களை வெட்டுதல், அல்லது குறைத்தல்.

அத்துடன் அந்த நகங்களுக்குக் கீழ் படிந்திருக்கும் அழுக்குகளை அகற்றுதல்.

## 04. அக்குள் முடியை நீக்குதல்.

இதை பிடுங்கியோ அல்லது மழித்தோ அல்லது வேறுமுறையிலோ நீக்குவது சுன்னத்தாகும். இதன் மூலம் மேனியின் சுத்தத்தை பேணி துர்வாடைகளை கட்டுப்படுத்திக்கொள்ள முடியும்.

மேற்குறிப்பிடப்பட்ட ஐந்து அம்சங்களுடன் சேர்த்து மேலதிகமாக (தாடியை வளர்தல், பல் துலக்குதல், நாசிக்கு தண்ணீர் செலுத்துதல், வாய் கொப்பளித்தல், மணிக்கட்டு மடிப்புகளில் படிந்திருக்கும் அழுக்குகளை சுத்தம் செய்தல்) ஆகியவை சுன்னத் தாக்கப்பட்டுள்ளது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் குறிப்பிட்டார்கள்:

பத்து அம்சங்கள் உள்ளன அவை “ஃபித்ரா” எனப்படும் இயற்கை பண்புகளாகும்.

மீசையை கத்தரித்தல், தாடியை நிறைவாக வைத்தல், பல் துலக்குதல், நாசுக்கு தண்ணீர்

செலுத்தல், நகங்களை வெட்டுதல், மணிக்கட்டு மடிப்புகளை கழுவுதல், அக்குள் முடியை நீக்குதல், மறைவிடங்களில் உள்ள முடிகளை அகற்றுதல், வாய் கொப்பளித்தல், மலசல தேவைகளை நிறைவேற்றிய பின் சுத்தம் செய்தல் ஆகியவையாகும். (முஸ்லிம்:261)